" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** *"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
*பொன்றாது நிற்பதொன்று இல் "*

**பொருள் :** உலகத்தில், ஓங்கிய புகழ் அல்லாமல், அழியாமல் நிலைத்து நிற்கும் பொருள் வேறு ஒன்றும் இல்லை.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

**<u>உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

**<u>மேயர் பிரேரேபிக்கும் தீர்மானம்</u>.**

வணிக கட்டிடங்களுக்கு – **1.4.2008** முதல் – 150% வரி உயர்வு செய்யப்பட்டுள்ளதால் இதனை ஆட்சேபித்து பல்வேறு வணிகர்கள், பொதுமக்கள் மேயரிடமும், ஆணையாளரிடமும் மனுக்கள் கொடுத்துள்ளனர். மேலும் அனைத்துக்கட்சி மாமன்ற தலைவர்களும் இந்த வரியை குறைக்க வேண்டுமென மாமன்ற கூட்டத்தில் கருத்து தெரிவித்திருப்பதால், இதனை நன்கு ஆராய்ந்து பொதுமக்களுக்கும் வணிகர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அதே சமயம் மாநகராட்சி வருவாயை பெருக்கவும் ஏற்கனவே உயர்த்தியுள்ள வரியை கீழ்கண்டவாறு மாற்றியமைக்க மேயர் பிரேரேபிக்கும் தீர்மானம்

| | | |
|---|---|---|
| கைத்தறி வரிவிதிப்புகள் | – | 50% |
| விசைத்தறி வரி விதிப்புகள் | – | 75% |
| நடுத்தர தொழிற்சாலைகள் | – | 75% |
| பெரிய தொழிற்சாலைகள் | – | 100% |
| கல்யாண மண்டபம் | – | 125% |
| தங்கும் விடுதிகள் | – | 125% |
| தியேட்டர்கள் | – | 50% |
| சிறப்பு இனங்கள் | – | 125% |
| சிறிய வணிகம் (கடை) 'எ' மற்றும் 'பி' கிரேடு | – | 100% |
| சிறிய வணிகம் (கடை) 'சி' மற்றும் 'டி' கிரேடு | – | 75% |

**தீர்மானம்**

மேயர் பிரேரேபித்துள்ள தீர்மானத்தின் மீது பேசிய பல மாமன்ற உறுப்பினர்கள் இவற்றில் சில மாற்றங்கள் செய்ய கோரியதற்கிணங்க, கீழ்கண்டவாறு வரி உச்ச வரம்பை (31.3.2008-க்குள் உள்ள வரிக்கான உச்சவரம்பு) மாற்றம் செய்து மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

| | | |
|---|---|---|
| கைத்தறி மற்றும் குடிசைத் தொழில் வரிவிதிப்புகள் – தரம் 4 | – | 50% |
| விசைத்தறி வரி விதிப்புகள் – தரம் 3 | – | 75% |
| தொழிற்சாலைகள் – தரம் 2 | – | 75% |
| தொழிற்சாலைகள் – தரம் 1 | – | 100% |
| கல்யாண மண்டபம் | – | 125% |
| தங்கும் விடுதிகள் | – | 100% |
| மருத்துவமனைகள் | – | 100% |
| தியேட்டர்கள் | – | 100% |
| வணிகம் ‘ஏ’’ மற்றும் ‘பி’’ கிரேடில் உள்ள பகுதிகளுக்கு | – | 100% |
| வணிகம் ‘சி’’ மற்றும் ‘டி’’ கிரேடில் உள்ள பகுதிகளுக்கு | – | 75% |

அரசு ஆணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (Elec.) துணை நாள்: 12.11.2007 அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண்.38279/Elec.2006-2, நாள்: 1.2.2008 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலக சுற்றறிக்கை எண்.63012/2007/R1, நாள்: 9.1.2008-ல் உள்ள வழிகாட்டுதலின்படியும், மாமன்ற தீர்மானம் எண்.338, நாள்: 28.3.2008-ல் அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, மதுரை மாநகராட்சியில் நடைமுறையில் உள்ள 8 மண்டலப்பிரிவுகளை நான்கு மண்டலங்களாக மாற்றியமைக்க அனைத்துக் கட்சி மாமன்றத் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழுவால் (பட்டியலின்படி) வணிகம், தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு வரி உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது. மீண்டும் அரசு ஆணை (நிலை) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 23.6.2008ல், அந்தந்த நகர்புற உள்ளாட்சி மன்றமே அதன் வருவாய் மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள வரி உயர்வு சதவிகிதத்திற்குள் இருக்கும்படியாக தீர்மானித்துக் கொள்ளலாம் என அரசு ஆணையிட்டுள்ளதன் பேரில், மாமன்றம் நன்கு பரிசீலித்து, குடியிருப்புக்கு 25% என வரி உச்சவரம்பு நிர்ணயம் செய்ததை மாமன்ற தீர்மானம் எண்.463, நாள்: 27.6.2008ல் 20% என குறைக்கப்பட்டது. மேலும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க வணிகக் கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் 1.4.2008–ல் மேற்கண்டவாறு வரி உச்சவரம்பை மாற்றியமைத்து, வரிசீராய்வு மேற்கொள்ள தீர்மானிக்கிறது.

**மாமன்ற தீர்மானம் எண் .584**

## 1) சி.டபிள்யு.3 / 0883 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 23.09.2008ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.585**
**பதிவு செய்யப்பட்டது.**

## 2) சி.டபிள்யு.2 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 24.09.2008ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .586**
**பதிவு செய்யப்பட்டது.**

## 3) சி.டபிள்யு.2 / 39182 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 16.10.2008ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .587**
**பதிவு செய்யப்பட்டது.**

## 4) மநி 8 / 36047/ 07

சேலம் மாநகராட்சியில் செயல் திறனற்ற பணியாளராக பணியாற்றிய திரு.ராஜகோபால் என்பவரை அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்ட சேலம் மாநகராட்சி ஆணையாளரின் கடிதத்தின்பேரில் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 231, நாள்.28.11.2007 ல் மதுரை மாநகராட்சி செயல் திறனற்ற பணியாளராக பணி மாறுதல் செய்ய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளதன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மந4) துறை அரசாணை (பத்தாண்டு) எண்.273, நாள்.27.06.2008ன்படி திரு.ராஜகோபால் என்பவரை மதுரை மாநகராட்சியின் செயல் திறனற்ற பணியாளராக பணி மாறுதல் செய்து பணி மூப்பு பட்டியலில் கடைசியாக இடம் பெறவும், இது தொடர்பாக எவ்வித முன்னுரிமையும் அளிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குட்பட்டும் அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : மேற்கண்ட அரசாணையின் அடிப்படையில் திரு.தி.ராஜகோபால் என்பவர் ஒரு வழி பணி மாறுதலில் மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் குடிநீர் வடிகால் பிரிவில் தேர்ச்சி திறனற்ற பணியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

**மாமன்ற தீர்மானம் எண் .588**
**பதிவு செய்யப்பட்டது.**

## 5) மநி 1 / 36130/ 08

மதுரை மாநகராட்சி தணிக்கை தடைகளை நீக்கும் ஆய்வாளராக அயற்பணியின்கீழ் பணிபுரிந்து வரும் திரு.ஆ.வியானி ஜான் பாஸ்கோ தணிக்கை ஆய்வாளரின் அயற்பணி காலத்தினை 1.11.2008 முதல் 31.10.2009 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிப்பு செய்து வரப்பெற்றுள்ள 16.09.2008ம் தேதிய உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரக பணியாளர் மற்றும் நிர்வாகம் 1(3) 2165/2008 செயல்முறை ஆணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .589**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6) மபொ4 / மஎண் 711/ 08-09

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகரப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் குடிசை பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ரூ.130.42 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக குடிசை பகுதிகளில் குடிநீர், பாதாளச்சாக்கடை சாலைகள், சத்துணவு மையங்கள் மற்றும் சமுதாய கூடங்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று கீழ்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | மபொ.5 மஎ(BSUP) 668/08-09<br>மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் குடிசை பகுதியில் (Phase I) 6" விட்டமுள்ள போர்வெல் அமைத்து ஏர்கம்பரஸர் மோட்டார் பம்ப் பொருத்துதல் | 8.40 | M/s.குமரன் அசோசியேட் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 2 | மபொ.5 மஎ(BSUP) 670/08-09<br>மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் குடிசை பகுதியில் (Phase I) ல் இருளப்பசாமி கோவில் தெருவில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல். | 9.50 | B.மொகைதீன் கமல்பாட்சா | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 3 | மபொ.5 மஎ(BSUP) 673/08-09<br>மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் குடிசை பகுதியில் 6" விட்டமுள்ள போர்வெல் அமைத்து ஏர்கம்பரஸர் மோட்டார் பம்ப் பொருத்துதல் | 11.50 | M.ரமேஷ் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 4 | மபொ.5 மஎ(BSUP) 677/08-09<br>மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் குடிசை பகுதியில் (Phase II) சிமெண்ட் கான்கீரிட் , கல்வெட் மழைநீர் வாய்க்கால் அமைத்தல். | 41.55 | B.மொகைதீன் கமல்பாட்சா | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மபொ.5 மஎ(BSUP) 675/08-09<br>மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம்<br>குடிசை பகுதியில் (Phase II)<br>பாம்பன் ரோடு சிறப்பு மராமத்து மற்றும்<br>மழைநீர் வாய்க்கால், கவரிங் சிலாப்<br>அமைத்தல். | 28.15 | D.செல்வக்குமார் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 6 | மபொ.7 மஎ(BSUP) 692/08-09<br>மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம்<br>வார்டுகளில் 6" விட்டமுள்ள<br>போர்வெல் (14 எண்ணம்) அமைத்தல் | 24.70 | M/s.குமரன் அசோசியேட் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 7 | மபொ.7 மஎ(BSUP) 689/08-09<br>மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம்<br>வார்டு எண் 25,29 மற்றும் 69 வார்டுகளில்<br>மழைநீர் வடிகால் அமைத்தல். | 17.00 | S.மகாராஜன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 8 | மபொ.7 மஎ(BSUP) 693/08-09<br>மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம்<br>வார்டு எண் 25,27,69 வார்டுகளில் குடிநீர்<br>மெயின் பைப் லைன் அமைத்தல். | 6.30 | B.பாண்டி | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 0.01%<br>குறைவு |
| 9 | மபொ.7 மஎ(BSUP) 690/08-09<br>மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம்<br>வார்டு எண் 30, வைத்தியநாதப்புரத்தில்<br>தார்சாலை அமைத்தல். | 5.60 | D.செல்வக்குமார் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 10 | மபொ.7 மஎ(BSUP) 691/08-09<br>மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம்<br>வார்டு எண் 25,27,69,70,71 வார்டுகளில்<br>கான்கிரீட் சாலை அமைத்தல். | 24.95 | S. ராமகிருஷ்ணன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 11 | மபொ.5 மஎ(BSUP) 683/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>60,64ல் பகுதியில் உள்ள சோலை<br>அழகுபுறம் மீனாம்பிகை நகர் பகுதியில்<br>மழை நீர் வடிகால் அமைத்தல். | 43.50 | G.இளங்குமரன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 12 | மபொ.5 மஎ(BSUP) 682/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>64, 65 பகுதியில் கோவலன் நகர்,<br>முத்துப்பட்டி மற்றும் மீனாம்பிகை நகர்<br>பகுதியில் மழை நீர் வடிகால் அமைத்தல். | 47.40 | M/s.யோகா & கோ | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 13 | மபொ.6 மஎ(BSUP) 684/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>64ல் மீனாம்பிகை நகர் மற்றும் இந்திரா நகர்<br>பகுதியில் 6" விட்ட போர்வெல் அமைத்தல் | 3.82 | R.செல்வகுமார் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 3.32%<br>அதிகம் |
| 14 | மபொ.6 மஎ(BSUP) 685/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>60ல் ஜானகி நகர் மற்றும் மகாலட்சுமிபுரம்<br>பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 9.65 | G.இளங்குமாரன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 15 | மபொ.6 / மஎ(BSUP) 686/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>33,34,41,42 மற்றும் 60 வார்டுகளில்<br>6" விட்ட போர்வெல் அமைத்தல் | 13.55 | N.S.செல்லப்பாண்டியன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.21%<br>அதிகம் |
| 16 | மபொ.6 மஎ(BSUP) 1649/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>41 VV.கிரி சாலையில் சிமெண்ட் கான்கிரீட்<br>சாலை அமைத்தல் | 10.30 | C.துரைராஜ் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.99%<br>அதிகம் |
| 17 | மபொ.4 மஎ(BSUP) 697/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>1,2,3,5,8,9 மற்றும் 12ன் 150அஅ விட்டம்<br>ஆழ்துளை கிணறு அமைத்து பவர் பம்பு பொருத்<br>(சிப்பம் 1) | 46.59 | M.ராமகிருஷ்ணன் | மதிப்பீட்டு<br>விலை<br>விகிதத்தை<br>விட 4.87%<br>அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | மபொ.4 மஎ(BSUP) 698/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3ல் அமைந்துள்ள காந்திபுரம், பாண்டியன் பகுதியில் புதிதாக குடிநீர் சப்ளை மெயின் அமைத்தல் (சிப்பம்/II) | 14.03 | B.பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.16% அதிகம் |
| 19 | மபொ.4 மஎ(BSUP) 699/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>4 மற்றும் 5ல் 150mm விட்டம் ஆழ்துளை கிணறு அமைத்து பவர் பம்பு பொருத்துதல். (சிப்பம்I) | 45.42 | G.இளங்குமரன் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 20 | மபொ.4 மஎ(BSUP) 705/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>4, 5ல் அமைந்துள்ள சம்பங்குளம் வடக்கு மருதங்குலம் பகுதி, முத்துராமலிங்கம்புரம் மற்றும் திருவள்ளுவர் நகரில் அமைத்தல், (சிப்பம் II) | 48.62 | M/s.மேக் கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.94% அதிகம் |
| 21 | மபொ.4 மஎ(BSUP)707/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>4ல் அமைந்துள்ள ஜவஉறர்புரம் மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்தல், (சிப்பம் IV) | 32.91 | M/s.மேகலா கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 22 | மபொ.4 மஎ(BSUP)711/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3ல் அமைந்துள்ள காந்திபுரம் குறுக்குத்தெருவில் சந்தனம் மாரியம்மன் கோவில் குறுக்குத் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், (சிப்பம் I) | 49.95 | K.சொக்கலிங்கம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% அதிகம் |
| 23 | மபொ.4 மஎ(BSUP)712/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>4ல் அமைந்துள்ள கொடிக்குலம் சத்யாநகர் சம்பக்குளம் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், (சிப்பம் II) | 50.00 | K.இராமர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.29% அதிகம் |
| 24 | மபொ.4 மஎ(BSUP)713/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3ல் அமைந்துள்ள மதிச்சியம் மற்றும் ஆசாரி தோப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், (சிப்பம் III) | 41.64 | K.இராமர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.31% அதிகம் |
| 25 | மபொ.4 மஎ(BSUP)714/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3, 8, 12ல் டோபி காலனி காமராஜர் தெரு முருகன் கோவில் குறுக்குத்தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (சிப்பம் IV) | 48.98 | R.விஷ்ணுராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகம் |
| 26 | மபொ.4 மஎ(BSUP)715/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>11ல் அமைந்துள்ள கரும்பாலை கிழக்கு மற்றும் குறுக்குத்தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (சிப்பம் V) | 41.02 | K.இராமர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.26% அதிகம் |
| 27 | மபொ.4 மஎ(BSUP)716/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3ல் உள்ள பாரதியார் குறுக்கு மற்றும் பாண்டியன் குறுக்குத்தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (சிப்பம் VI) | 43.08 | K.இராதா | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 28 | மபொ.4 மஎ(BSUP)717/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>1, 20ல் உள்ள சிலோன் காலனி மற்றும் கீழகைலாசபுரம் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (சிப்பம் VII) | 25.06 | M/s.சண்முகர் கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 29 | மபொ.4 மஎ(BSUP)718/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>5ல் உள்ள பர்மா காலனி, திருவள்ளுவர் தெரு மற்றும் முத்துராமலிங்கபுரம் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (சிப்பம் VIII) | 44.54 | C.துரைராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | மபொ.4 மஎ(BSUP)719/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>3, 4ல் அமைந்துள்ள காந்திபுரம் மெயின் ரோடு மற்றும் அந்தனேரி ரோட்டில் தார் சாலை அமைத்தல்<br>(சிப்பம் I) | 42.29 | M/s.குமரன் அசோசியேட்ஸ் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.99% அதிகம் |
| 31 | மபொ.4 மஎ(BSUP)720/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>12,4ல் அமைந்துள்ள பி.டி.ஆர் மற்றும் ஜவஉற்லால் புரம் சாலைகளில் தார் சாலை அமைத்தல் (சிப்பம் II) | 46.50 | M/s.யோகா & கோ | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.93% அதிகம் |
| 32 | மபொ.4 மஎ(BSUP)721/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>4ல் அமைந்துள்ள கொடிக்குளம் மற்றும் சம்பக்குளம் 2வது மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் (சிப்பம் III) | 34.16 | M/s.மேக் கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.94% அதிகம் |
| 33 | மபொ.4 மஎ(BSUP)722/08-09<br>மதுரை மாநகராட்சி வார்டு எண்<br>1,20ல் அமைந்துள்ள இந்திராநகர் 3,4,5 தெருக்களில் மற்றும் குலமங்கலம் பகுதியில் தார் சாலை அமைத்தல் (சிப்பம் IV) | 49.68 | K.S.சக்தி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகம் |

மேற்கண்ட பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு,

**மாமன்ற தீர்மானம் எண் .590**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 7) மதி2 /31730 / 2006

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மதுரை வீட்டு வசதிப் பிரிவு எல்லீஸ்நகர் திட்டமனை வரைபடம் எண் 44/85 என்ற எண்ணில் ஒப்புதல் பெறப்பட்ட மனை வரைபடத்தில் விளையாட்டு மைதானமாக ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியை அலுவலக உபயோகமாக மாற்றம் செய்யக் கோரியும் மனையினை உட்பிரிவு செய்யவும் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு மற்றும் புது எல்லீஸ் நகர் திட்டத்தின்படி விளையாட்டு மைதானமாக ஒதுக்கப்பட்ட இடமாகும். அதில் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி போக மீதமுள்ள பகுதியை அலுவலக உபயோகமாக மாற்ற கோரப்பட்டுள்ளது. தற்போது பிரஸ்தாப இடம் வீட்டுவசதி வாரியத்தின் அலுவலகமாக உபயோகத்தில் உள்ளது. மனுதாரரின் கோரிக்கையை மாமன்றத்தின் ஒப்புதலுடன் உள்ளூர் திட்ட குழுமத்திற்கு மேல் அனுப்பி வைக்கக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .591**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 8) B30 /27376 / 05

மதுரை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள அவனியாபுரம் மூன்றாம்நிலை நகராட்சி மற்றும் திருப்பரங்குன்றம் மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர்கள் தங்களது நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரிக்க போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் மாநகராட்சிக்கு சொந்தமான அவனியாபுரம் வெள்ளைக்கல் குப்பை மையத்தில் சேகரிப்பு செய்ய இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி கோரியது பேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண். ந.க.எண்.103771/05 /ஒய்1, நாள்:17.10.05 ம் தேதிய கடிதத்தில் திருப்பரங்குன்றம் மற்றும் அவனியாபுரம் நகராட்சிகளில் சேரும் குப்பைகளை மாநகராட்சி குப்பை மையத்தில் கொட்ட அனுமதி கோரிய மனுக்களின் பேரில் நடவடிக்கை எடுக்க கோரியதின் பேரில் மாமன்றத் தீர்மானம் எண்.398 நாள்:29.11.05 ல் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளைக்கல் குப்பை மையத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலில் நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி குப்பை மையத்தில் கொட்டுவதற்கு வாடகை பெற உரிய மேல்நடவடிக்கை எடுக்க வேண்டியது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி வெள்ளைக்கல் குப்பை மையத்தில் உள்ள புல் பண்ணை 179.70 ஏக்கர் இடத்திற்கு ரூ.24.27 லட்சம் ஏலம் விடப்பட்டுள்ள கணக்கின்படி ஒரு ஏக்கர் இடத்திற்கு வருடத்திற்கு ரூ.14,000/- (ரூபாய் பதினான்காயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்யலாம். இந்நகராட்சிகளில் கொட்டப்படும் குப்பைகளுக்கு கீழ்க்கண்டவாறு ஆண்டு செலவுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| வ. எண். | ஆண்டு | அவனியாபுரம் நகராட்சி | | திருப்பரங்குன்றம் நகராட்சி | |
|---|---|---|---|---|---|
| | | குப்பையின் அளவு ஓர் ஆண்டுக்கு(டன்) | வாடகை ஓர் ஆண்டுக்கு (ரூபாயில்) | குப்பையின் அளவு ஓர் ஆண்டுக்கு(டன்) | வாடகை ஓர் ஆண்டுக்கு (ரூபாயில்) |
| 1 | 2008 | 6250.00 | 1054850.00 | 5840.00 | 992800.00 |
| 2 | 2009 | 6296.25 | 1041346.48 | 5931.25 | 980978.57 |
| 3 | 2010 | 6387.50 | 1022044.71 | 6022.50 | 963642.16 |
| 4 | 2011 | 6478.75 | 1027562.64 | 6113.75 | 969671.79 |
| 5 | 2012 | 6570.00 | 1078075.42 | 6205.00 | 1018182.34 |
| 6 | 2013 | 6661.25 | 1062549.58 | 6296.25 | 1004327.68 |
| 7 | 2014 | 6752.50 | 1086189.54 | 6387.50 | 1027476.60 |
| 8 | 2015 | 6843.75 | 1097338.28 | 6478.75 | 1038813.58 |
| 9 | 2016 | 6935.00 | 1097972.18 | 6570.00 | 1040184.17 |
| 10 | 2017 | 7026.25 | 1089825.74 | 6661.25 | 1033211.41 |
| 11 | 2018 | 7117.50 | 1074417.31 | 6752.50 | 1019318.99 |
| 12 | 2019 | 7208.75 | 1053072.49 | 6873.75 | 999752.37 |
| 13 | 2020 | 7300.00 | 1026945.13 | 6935.00 | 975597.87 |
| 14 | 2021 | 7361.25 | 997036.36 | 7026.25 | 947799.99 |
| 15 | 2022 | 7482.50 | 964211.77 | 7117.50 | 917177.05 |
| 16 | 2023 | 7573.75 | 929216.79 | 7208.75 | 884435.26 |
| 17 | 2024 | 7665.00 | 892690.57 | 7300.00 | 850181.49 |
| 18 | 2025 | 7756.25 | 855178.42 | 7391.25 | 814934.73 |
| 19 | 2026 | 7847.50 | 817142.96 | 7482.50 | 729136.31 |
| 20 | 2027 | 7938.75 | 778974.09 | 7573.75 | 743159.19 |

மேற்கண்ட விபரப்படி 2008 முதல் 2028 வரையிலான 20 ஆண்டுகளுக்கு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தினால் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி குப்பையை கையாளுவதற்கு வருடத்திற்கு ஆகும் செலவுத் தொகையையும் இடத்திற்கான வருட வாடகையையும் நிர்ணயம் செய்து மேற்படி அவனியாபுரம் மற்றும் திருப்பரங்குன்றம் நகராட்சிகளிலிருந்து தொகையை பெற்றுக்கொண்டு பணியை மேற்கொள்ள அவனியாபுரம் நகராட்சி மற்றும் திருப்பரங்குன்றம் நகராட்சி செயல் அலுவலர்களின் சம்மதம் தெரிவிக்க கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அதன்பேரில் தற்போது திருப்பரங்குன்றம் மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர் அவர்கள் தமது 02.09.08ம் தேதிய கடிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை திருப்பரங்குன்றம் நகராட்சி மன்ற (தீர்மானம் எண்.343/08, நாள்:29.08.08)த்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் எனவே இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை வெள்ளைக்கல் உரக்கிடங்கில் கொட்டுவதற்கு அனுமதி வழங்க கோரப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் மூன்றாம்நிலை நகராட்சி செயல் அலுவலர் அவர்களின் சம்மதக் கடிதத்தினை ஏற்று பட்டியலில் கண்டுள்ள விபரப்படி தொகையினைக் பெற்றுக்கொண்டு திருப்பரங்குன்றம் நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையினை நகராட்சியின் வாகனங்கள்

மூலம் மாநகராட்சி அவனியாபுரம் வெள்ளைக்கல் குப்பை மையத்தில் இடம் ஒதுக்கீடு செய்து கொட்டுவதற்கு அனுமதிக்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு .

**மாமன்ற தீர்மானம் எண் .592**
**செலவு கணக்கு விபரங்களை மீண்டும் சரிபார்த்து அடுத்து மாமன்ற கூட்டத்தில் வைக்கவேண்டியது.**

## 9) ந.பொ.1/21231/ 06

வைகை நதி மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணாநகர் பாலம் வரை வைகையாற்றின் இடது புற கரையில் வெள்ளத் தடுப்பு கரை ஏற்படுத்தி அலை கற்கள் பதித்து தார் சாலை அமைத்து கைப்பிடி தடுப்பு அமைக்கும் பணிகளை ரூ.162.00 இலட்சத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண்.354 நாள்:31.01.07 முதல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக தலா ரூ.5.00 இலட்ச மதிப்பீட்டில் மூன்று மதிப்பீட்டு பணிகளையும் மேற்கொள்வதற்கு பொதுப்பணித்துறையினரால் நிர்வாக ஒப்புதல் கோரப்பட்டு திட்டத்தின் இன்றியமையாமையை கருத்திற்கொண்டு மூன்று மதிப்பீட்டு பணிகளையும் மேற்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ரூ.177.00 இலட்ச மதிப்பீட்டு தொகையில் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்படும் வைகை நதி சீரமைப்பு திட்டப்பணிக்கு இதுவரை மாநகராட்சியில் ரூ.66.00 இலட்சம் மட்டுமே வழஙகப்பட்டுள்ளது. எனவே எஞ்சிய நிதித்தொகை ரூ.111.00 இலட்சங்களை பொதுப்பணித்துறைக்கு விடுவிக்கும் பட்சத்தில் பணிகள் விரைவாக முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வர இயலும். குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணா நகர் பாலம் வரை வைகையாற்றின் இடதுபுற கரையில் வசிக்கும் பொதுமக்களை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் வைகை நதி சீரமைப்பு திட்டப்பணிகளை எவ்வித தொய்வில்லாமல் முழுமையான அளவிலும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பு தொகையை மாநகராட்சியால் வசூலிக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் 01.04.2008 முதல் 31.03.2010 வரையுள்ள நான்கு அரையாண்டுகளுக்கு மட்டும் மாநகராட்சியால் வசூலிக்கப்படும் சொத்துவரி தொகையுடன் வைகை நதி சீரமைப்பு திட்ட நிதியென கூடுதலாக 2% மட்டும் சேர்த்து வசூலிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .593**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 10) H1/10232/ 07

மதுரை மாநகராட்சி நகர்நலப்பிரிவில் மருத்துவ அலுவலராக பணியாற்றி 31.05.2000 ல் ஓய்வுபெற்ற திருமதி.V.பாரிஜாதம் என்பவருக்கு 16.04.2008 முற்பகல் முதல் சிறப்புநிலை வழங்கவும் 10,000-325-15,200 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .594**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 11) B30/33686/ 08

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிக்கும் நிலையத்தில் வைகை அணையிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத நீரினை சுத்திகரிப்பு செய்து குடிநீரில் குளோரினேசன் செய்து மதுரை மாநகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அரசரடி நீரேற்று நிலையம், மணலூர் நீரேற்று நிலையம், கோச்சடை நீரேற்று நிலையம் மற்றும் மாநகராட்சி நீச்சல் குளம் ஆகியவற்றிற்கும் சேர்த்து மொத்தம் 125 மெட்ரிக் டன் குளோரின் நவம்பர்–2008 முதல் அக்டோபர் 2009 முடிய உள்ள காலத்திற்கு சப்ளை பெற வேண்டியுள்ளது. அதற்கான 2008-2009ஆம் ஆண்டு விலை விகிதத்தில் உத்தேச மதிப்பீடு ரூ.23.13 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கும் ஒப்புதல் பெற்று அதன்பின்னர் உரிய விளம்பரம் வெளியிட்டும் இணையதளத்தில் வெளியிட்டும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கலாம் என்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .595**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 12) மதி.1/28340/ 08

மதுரை வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராமம் புல எண்.134/2ல் கட்டுப்பட்ட 4.00 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் புறநகர் மேம்பாட்டு துறையினரிடமிருந்து மீளப்பெற்று சட்ட கல்லூரிக்கு நிலமாற்றம் செய்ய மதுரை மாநகராட்சி தீர்மானம் மற்றும் தொழில்நுட்ப கருத்தினை அனுப்பிவைக்குமாறு கோரிய மதுரை வடக்கு வட்டாட்சியரின் கடிதம் ந.க.எண்.5867/06 அ3, நாள்:29.07.08 வாசிக்கப்பட்டு மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடம் சர்வே வார்டு XV1 பிளாக் எண்.36 TSNo.101 ல் கட்டுப்பட்ட இடத்தில் வடபுறம் 1 ஏக்கர் 15 சென்ட் பரப்பளவுள்ள அரசுக்கு சொந்தமான கண்மாய் புறம்போக்கு இடமாகும். மேற்படி இடத்தில் சட்டக்கல்லூரி தங்கும்விடுதி கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது. ஆகவே மேற்படி இடத்தை சட்டக்கல்லூரிக்கு நிலமாற்றம் செய்ய மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனை இல்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .596**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 13) மதி.4/43246/ 97

மதுரை மாநகரின் மையமாக உள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவிலின் நான்கு கோபுரங்கள் மறைக்கப்படாமல் இருக்கும் வண்ணம் அரசாணை எண்.164 ந.நி.கு.வ.துறை நாள்:15.6.94ல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு அதன் உயரத்தை கட்டுபடுத்தி உபவிதி வெளியிடப்பட்டது. இந்த உபவிதியின்படி அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலை சுற்றி நான்கு மாசி வீதிகளுக்குள் அடங்கிய பகுதியில் அதிக பட்ச கட்டிட உயரம் 9மீ எனவும், மாசி வீதியிலிருந்து நான்கு வெளி வீதிகளுக்குள் அடங்கிய பகுதியில் அதிகபட்ச உயரம் 12மீ எனவும், வெளி வீதிகளுக்கு வெளியே மாநகராட்சி எல்லை வரையிலும் அதிகபட்ச உயரம் 15மீ வரையிலும் தான் அனுமதிக்கப்பட வேண்டும் என உள்ளது.

இந்த உபவிதி அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கும்போது மதுரை நகர் உள்ளடங்கிய 38 புராதான கோவில் நகரங்களுக்கு பொதுவாக கட்டிட உயரங்களை கட்டுப்படுத்தி அரசாணை எண் 22, ந.நி.கு.வ நாள்:31.01.97ல் வெளியிடப்பட்டது. இவ்வரசணையின்படி அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் சுற்றுச்சுவர்களிலிருந்து 1கிமீ சுற்றளவுக்குள் அடங்கிய பகுதியில் அதிகபட்ச கட்டிட உயரம் 9 மீ என கட்டுபடுத்தப்பட்டுள்ளது. உபவிதிக்கு பதில் இந்த அரசாணை அமல்படுத்தப்பட்டு வந்த நிலையில் மதுரை மாநகராட்சி ஆணையரால் மதி2/43246/97, நாள்:29.9.2004 அலுவலக உத்தரவில் உபவிதியை மட்டும் பின்பற்ற உத்தரவிடப்பட்டது, சட்டபூர்வ உபவிதியை பின்பற்றுவதா? அல்லது அரசாணை எண் 22 ஐ பின்பற்றுவதா? என தெளிவாணைக் கோரி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்தக் கோரிக்கையை பரிசீலித்து அரசு கடிதம் எண்.29463/MA-1/2004-11, நாள்:17/10/2008ல் தனது தெளிவாணையை அனுப்பியிருக்கிறது. இவ்வாணையில் மாநகராட்சி ஆணையரால் 29.9.2004ல் வழங்கப்பட்ட அலுவலக உத்தரவை ரத்து செய்து அரசாணை எண்.22ஐ பின்பற்றும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வரசாணை எண்.22ஐ கருத்தில் கொண்டு ஒரு புதிய உபவிதியை வெளியிட மாநகராட்சி சட்ட பிரிவுகளின்படி நடவடிக்கை எடுத்து அரசின் உறுதியாக்கத்திற்கு அனுப்பி வைக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே முதற்கட்டமாக இவ்வலுவலக உத்தரவு மதி2/43244/97 நாள்:29.09.04ஐ ரத்து செய்து மீண்டும் அரசாணை எண்.22 ஐ பின்பற்றவும் அரசின் 17.10.08 தேதிய கடிதத்தை பதிவு செய்யவும் புதிய உபவிதியை வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .597**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 14) மதி.1/35134/ 08

மதுரை மாகராட்சிக்குட்பட்ட பாத்திமா கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் அமைந்துள்ள சாலை வளைவில் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டில் வீரத்தை நினைவூட்டும் வகையில் காளையை அடக்கும் வீரத்தமிழனின் வெண்கலச் சிலையினை நிறுவ அலங்காநல்லூர் பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதால், மேற்படி சிலை அமைப்பதற்காக உருவாக்கப்பட்ட குழுவின் குழு தலைவரும் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கடிதத்தின் மேற்காணும் சிலை நிறுவுவதற்கென செலவினையும்

அதனை பராமரிக்கும் பொறுப்பினை குழு ஏற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி சிலை அமைக்க மாநகராட்சி தடையின்மை சான்று வழங்கக்கோரிய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.79895/08 ஊ.வ.9 நாள்:30.09.08 வாசிக்கப்பட்டு மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டதில் சிலை அமைக்க உத்தேசித்துள்ள சாலைத்திட்டு அமைந்துள்ள அலங்காநல்லூர் சாலை நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானதாகும். எனவே மேற்கண்ட இடத்தில் வீரத்தமிழன் வெண்கலச்சிலையினை அமைத்துக்கொள்ள மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனை இல்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் .598**</u>

<u>**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**</u>

## <u>15) ம.தி.1/35135/ 08</u>

மதுரை தெற்கு வட்டம் மாடக்குளம் கிராமம் புல எண்.20 P/1ல் கட்டுப்பட்ட 0.47 சென்ட் இடத்தில் ஆக்கிரமித்து குடியிருந்து வரும் 31 குடும்பங்களுக்கு வீட்டு மனைத்திட்டத்தின் கீழ் வீட்டு மனை வழங்கிட உத்தேசித்துள்ளதாகவும் மேற்படி இடத்திற்கு அருகாமையில் இருப்புப்பாதை வருவதால், தென்னக இரயில்வேயிடமிருந்து தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளதாலும், வீட்டுமனை வழங்க மாநகராட்சியின் கருத்தினை தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோரிய மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.68341/08 ஜே4/30.09.08ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டதில் சர்வே ஆவணங்களின்படி TPK ரோடு மீனாட்சி மில் காலனி பழைய TS.No.20/B1 புதிய TS.No.2 ல் கட்டுப்பட்ட தென்னக இரயில்வே துறையினரைச் சார்ந்த இடமாகும். மாவட்ட ஆட்சித் தலைவரது கடிதத்தில் தென்னக இரயில்வே துறையினரிடமிருந்து ஏற்கனவே தடையில்லலாச் சான்று பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரஸ்தாப இடத்தை நத்தமாக நிலப்பாகுபாடு செய்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா வழங்க தென்னக இரயில்வே துறைக்கு ஆட்சேபனை இல்லாதபட்சத்தில் மாநகராட்சிக்கும் எவ்வித ஆட்சேபனையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் .599**</u>

<u>**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**</u>

## <u>16) ம.தி.1/33669/ 08</u>

மதுரை தெற்கு வட்டம், வடக்கு மதுரை கிராமம், புல எண்.822/3Aல் கட்டுப்பட்ட 0.29 சென்ட் இடத்தை ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு துணை கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருவதால் மேற்படி நிலத்தை முறையாக நிலமாற்றம் செய்து அரசாணை பெறுவதற்கு மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி நகல் ஒன்றினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள மதுரை தெற்கு வட்டாட்சியர் (பொ)நக.எண்.3113/07 C1, நாள்: 22.09.08 தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டதில் சர்வே வார்டு X பிளாக் எண்.21 TS.No.822/3Aல் கட்டுப்பட்ட அரசுக்கு சொந்தமான இடமாகும். மேற்படி இடத்தை ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறைக்கு நிலமாற்றம் செய்ய மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் .600**</u>

<u>**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**</u>

## <u>17) H3/32606/ 08</u>

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு 2008-2009ம் ஆண்டுக்குத் தேவையான கைத்தறி சீருடைத் துணிகளை நேசனல் டெக்ஸ்டைல் நிறுவனத்தின் மூலமாகவும், கதர் சீருடைத் துணிகளை கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலமாகவும் கொள்முதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| <u>**செலவின விபரம்**</u> | | <u>**தொகை**</u> |
|---|---|---|
| கைத்தறி துணிகளுக்கு தேவையான செலவு | – | ரூ. 7,70,630.90 |
| கதர் சீருடைத் துணிகளுக்கு தேவையான செலவு | – | <u>ரூ. 6,22,386.09</u> |
| | | <u>ரூ.13,93,016.99</u> |

<u>**மாமன்ற தீர்மானம் எண் .601**</u>

<u>**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**</u>

**18) தெமவ5/1604108/ 08**

மதுரை மாநகர் வார்டு **38**, கதவு எண்.**6**, ஜடாமுனி கோவில் தெற்கு தெருவில் உள்ள சத்திரம் டிரஸ்டி ஆரியவைசிய கன்னிகா பரமேஸ்வரி என்ற பெயரில் உள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு மாமன்றம் தீர்மானம் 992/26.12.1974ல் 01/04/1974 முதல் வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்படி பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, புதியதாக சகலவசதிகளுடன் கூடிய திருமண மண்டபம் கட்டி. திருமண பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதால், ஒரு சமூக திருமண மண்டபத்திற்கு விலக்களித்தால், மற்ற சமுதாய திருமண மண்டபத்திற்கு விலக்களிக்க வேண்டிய நிலை ஏற்படாமல் இருக்கவும், மாநகராட்சியின் நிதிநிலையை கருத்தில்கொண்டு, ஏற்கனவே சத்திரகட்டிடத்திற்கு வரி விலக்கப்பட்ட மாமன்ற தீர்மானம் எண்.**992**/26.12.1974 ரத்து செய்தும், புதிய கட்டிடத்திற்கான சொத்து வரி விதிக்கவும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு,

குறிப்பு : கதவு எண் **87**, தெற்கு ஆவணி மூலவீதியில் உள்ள கடைகள் நீங்கலாக சத்திரம் மட்டும் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .602**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**19) B30/30604/ 08**

மதுரை மாநகராட்சி பணிக்கு தேவையான வாகனங்கள் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ், **15** எண்ணம் புதிதாக வாங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் போதுமான ஓட்டுநர்கள் இல்லை என்பதால் **15** வாகனங்களுக்கு **2** ஷிப்டுகளுக்கு தேவையான **30** கனரக வாகன ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டுக்கு சப்ளை பெறுவதற்கு **2008–2009**ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.17,94,705/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கும், உரிய விளம்பரம் வெளியிட்டும், இணையதளத்தில் வெளியிட்டும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு,

**மாமன்ற தீர்மானம் எண் .603**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**(ஓம்..) ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 31.10.2008**

* * * * * * *

கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **மபொ.3 / ம.எண் 348 /07-08**

மதுரை மாநகராட்சி இரண்டவது மாநில நிதிக்குழு 2007-08ன்கீழ் மண் சாலைகளை தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.176.00 இலட்சம் அரசு மானியமாக (G.O.(4D)No.2 M.A & W.S.(M.A-II) Department , நாள்.28.07.07) பெறப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று கீழ்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | மபொ.3 ம.எண் 547/07-08<br>ஜீவா தெருவில் உள்ள மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல்.<br>(வார்டு எண் 19) | 18.80 | V. விஜயக்குமார் | |
| 2 | மபொ.3 ம.எண் 424/07-08<br>தமிழன் தெரு, மாணிக்கம் தெரு, அம்மன் வாசுகி தெரு மற்றும் மற்ற தெருக்கள், குறுக்குத்தெருக்களில் உள்ள மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 52) | 24.45 | P. முரளி | |
| 3 | மபொ.3 ம.எண் 413/07-08<br>சி.எம்.ஆர் ரோடு இருபுறமும் உள்ள குறுக்குத் தெருக்களில் உள்ள மண்சாலைசிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 55) | 23.00 | S.ராமகிருஷ்ணன் | |
| 4 | மபொ.3 ம.எண் 546/07-08<br>வைகை வீதி, ரோஸ் வீதி, பாண்டியன் தியேட்டர் தெருக்கள் அன்னைதெரசா 1வது மற்றும் குறுக்குத் தெருக்களில் உள் மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 1) | 19.60 | M/s.அண்ணாமலை கன்ஸ்டரக்ஷன் | |
| 5 | மபொ.3 ம.எண் 348/07-08<br>அசோக் நகர், வ.உ.சி தெரு, கே.டி.பி.கே தங்கமணி தெருக்களில் உள்ள மண்சாலைகளை தார் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 1) | 24.90 | M/s.மகேந்திரா கன்ஸ்டரக்ஷன் | |
| 6 | மபொ.7 ம.எண் 279/07-08<br>பென்னர் நகர், கிருஷ்ணன் தெருக்களில் உள்ள மண்சாலைகளை தார் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 72) | 20.00 | A.சீனிவாசன் | |
| 7 | மபொ.7 ம.எண் 460/07-08<br>பல்லவன் நகர், 6வது, 4வது தெரு, பாத்திமாக நகர், அன்பு வீதி குறுக்குத் தெருக்கள், காரல்மாக்ஸ் 3வது | 15.60 | K.R.கண்ணன் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரு இந்திரா குறுக்குத்தெருக்களில் உள்ள மண்சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல். (வார்டு எண் 71) | | | |
| 8 | மபொ.7 ம.எண் 364/07-08 முத்து தேவர் காலனி மற்றும் வ.உ.சி தெருக்களில் உள்ள மண்சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 72) | 23.20 | R.ரவிக்குமார் | |
| 9 | மபொ.7 ம.எண் 333/07-08 லூர்து நகர் 1வது முதல் 6வது தெருக்கள் மற்றும் குறுக்குத் தெருக்களில் உள்ள உள்ள மண்சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 3) | 19.80 | K.வெங்கட்ராமன் | |
| 10 | மபொ.7 ம.எண் 334/07-08 லூர்து நகர் 8வது முதல் 10வது தெருக்கள் மற்றும் குறுக்குத் தெருக்களில் உள்ள உள்ள மண்சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 3) | 19.80 | K.வெங்கட்ராமன் | |
| 11 | மபொ.7 ம.எண் 282/07-08 நேரு நகர், சுப்பிரமணிய சிவா தெருக்களில் உள்ள மண் சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 68) | 14.95 | B.முருகன் | |
| 12 | மபொ.7 ம.எண் 278/07-08 நடராஜ் நகர், டோக் நகர் மற்றும் குறுக்குத் தெருக்களில் மண் சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 72) | 19.00 | B.முருகன் | |
| 13 | மபொ.3 ம.எண் 442/07-08 பாலுரணி மெயின் 1வது, 2வது,3வது தெருக்களில் உள்ள மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 2) | 16.50 | P.செல்வி | |
| 14 | மபொ.3 ம.எண் 445/07-08 தபால்தந்தி நகர், 1வது தெரு மற்றும் குறுக்குத்தெரு, 2வது தெருக்களில் உள்ள மண் சாலைகளை சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 2) | 16.60 | T.சந்திரசேகர் | |
| 15 | மபொ.3 ம.எண் 451/07-08 JN நகர், (கன்மாய் மேற்கு முதல் JN நகர் முதல் தெரு) தெருக்களில் உள்ள மண் சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 2) | 22.20 | தேன்மொழி | |
| 16 | மபொ.4 ம.எண் 937/07-08 மானகிரி வடக்கு, காட்டாரி தெரு, சாவடி தெரு மானகிரி கிழக்கு மற்றும் ஆதிதிராவிடர் தெருக்களில் உள்ள மண் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 6) | 16.80 | B.ரவிமோகன் | |
| 17 | மபொ.4 ம.எண் 396/07-08 கே.கே. நகர் மற்றும் Deputy Collector காலனி 1வது முதல் 9வது தெருக்களில் மண் சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் (வார்டு எண் 6) | 24.50 | B.ரவிமோகன் | |

மேற்கண்ட பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .604**
**பின்னேற்பு செய்து குறிப்புக் கொள்ளப்பட்டது.**

2) **மதி.1 / 33777 /08**

மதுரை தெற்கு வட்டம், பொன்மேனி கிராமம், புல எண். 86/2 உள்ள இடத்தில் வீடுகள் கட்டி ஆக்கிரமித்துள்ள நபர்களுக்கு அரசாணையின்படி வீட்டுமனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சியின் கடிதத்தினை தீர்மான வடிவில் அனுப்பி வைக்குமாறு கோரிய மதுரை தெற்கு வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்.1524/07/சி3, நாள்:23.09.08 வாசிக்கப்பட்டு மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டத்தில் சர்வே வர்டு XXIII, பிளாக் எண்.17, சர்வே எண்.86/2ல் கட்டுப்பட்ட பைபாஸ் சாலையின் ஓரத்திலிருந்து இச்சாலை தேசிய நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்தது. மேற்படி இடத்தில் வீட்டுமனை பட்டா வழங்க மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .605**

**பிரஸ்தாப இடத்தில் கட்டுமானங்கள் ஏதும் கட்டப்பட்டுள்ளதா என்பதை நேராய்வு செய்து விரிவான குறிப்புடன் அடுத்த மாமன்ற கூட்டத்தில் வைக்க வேண்டியது.**

3) **ம.வ.3 / 36704 /08**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு விழாக்கள், மாநாடுகள், ஊர்வலங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் இதர அமைப்புகளால் தற்காலிகமாக டிஜிட்டல் மற்றும் பிளக்ஸ் போர்டுகள் அமைக்கப்படுகின்றன. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண்.32979/07 சி2/நாள்:15.10.08ல், தலைமைச் செயலாளர் நே.மு.க.எண்.20741/எம்.சி.1/2007ல்–1 நாள்30.08.07ல் தற்காலிக டிஜிட்டல் மற்றும் பிளக்ஸ் போர்டுகள் வைக்க முறையான அனுமதி பெற்று குறிப்பிட்ட விழாவிற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக நிறுவப்பட்டு, விழா முடிவுற்ற பின்னர் இரண்டு நாட்களுக்குள் அகற்றப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இதற்கான முறையான அனுமதியை மாநகராட்சியிடமும், காவல் துறையினரிடமும் பெற்று பிளக்ஸ் போர்டுகள் அமைக்கவேண்டும்.

தற்சமயம் மதுரைமாநகராட்சி எல்லையில் வைக்கப்படும் பிளக்ஸ் போர்டுகளுக்கு, ஒரு போர்டு 10”X10” என்ற அளவில் 5 நாட்களுக்கு ரூ.250/- வீதம் கட்டணம் வசூல் செய்ப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. வரவேற்பு வளைவுகள் அமைக்க ஒரு வரவேற்பு வளைவிற்கு ரூ.2500/- வீதம் கட்டணம் வசூல்செய்து அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் ஒரு பிளக்ஸ்போர்டுக்கு10”X10” என்ற அளவில் ரூ.1000/- என 5 நாட்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யவும், கூடுதல் அளவு கொண்டு பிளக்ஸ் போர்டு சதுர அடி 1-க்கு ரூ.10/- கூடுதலாக நிர்ணயம் செய்யவும், மேலும் வரவேற்பு வளைவு ஒன்றுக்கு ரூ.10,000/- என நிர்ணயம் செய்து அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .606**

**10 x 10 அளவில் தற்காலிக பிளக்ஸ் போர்டு வைக்க ரூ.300/- எனவும், வரவேற்பு பிளக்ஸ் வைக்க ரூ.3000/- எனவும் நிர்ணயம் செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

4) **ம.பொ.7/30322/08**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.26 மேலப் பொன்னகரம் மெயின்ரோடு கதவு எண்.49Aல் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் சாமி தரிசனத்திற்கு வரும் பக்த கோடிகள் சிரமப்படுவதால் இலவசமாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .607**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

5) **ம.பொ.6/36955/08**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம், மேலவெளிவீதி பெரியார் பேருந்து நிலையம் மீனாட்சி நிலையம் முன்புறம் அமைந்துள்ள நடைமேடை பாலம் தற்பொழுது பொதுமக்களின் உபயோகமின்றி பயனற்ற நிலையில் உள்ளது. மேலும் நடைமேடை பாலம் சேதமுற்ற நிலையில் காணப்படுகிறது. தற்பொழுது புதிதாக கட்டப்பட்ட எல்லீஸ் நகர் உயர்த்தப்பட்ட மேம்பாலத்திற்கு ஏற்ப மேலவெளிவீதி அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால் பயனற்ற நிலையில் உள்ள இந்நடைமேடை பாலத்தினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .608**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது..**

**6) ம.பொ.7/36756/08**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.33ல் அமைந்துள்ள ராணி மங்கம்மாள் சத்திரம் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி நவீன முறையில் புதுப்பிக்கப்பட உள்ளது. இதற்காக ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.52.00 இலட்சமாகும். மேற்கண்ட கட்டிடத்தை புதுப்பிக்கவும், உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.52.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .609**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**7) ம.தி.1 /8159/08**

மதுரை தெற்கு வட்டம், வடக்கு மதுரை கிராமம் நகர நில அளவை எண். 30-ல் ஆக்கிரமித்து குடியிருந்து வரும் 3 நபர்களுக்கு அரசாணையின்படி வீட்டுமனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், மாநகராட்சி கருத்தினை தீர்மான வடிவில் அனுப்பி வைக்க கோரிய மதுரை வருவாய் கோட்டாட்சியர் ந.க.எண்.14956/07சி, நாள்:29.02.08ந் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டதில் சர்வே வார்டு X, பிளாக் எண்.77 T.S.No.29 மற்றும் 30ல் கட்டுப்பட்ட அரசுக்கு சொந்தமான மந்தை புறம்போக்கு இடமாகும் மேற்கண்ட இடத்தில் வீரகாளியம்மன் கோவில் மற்றும் 5 குடிசை வீடுகள் உள்ளது. T.S.No .30-ல் உள்ள அரசுக்கு சொந்தமான மந்தை புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமித்து குடியிருந்து வரும் 3 நபர்களுக்கு அரசாணையின்படி பட்டா வழங்குவதற்கு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனை இல்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .610**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**8) மே.ம.பொ.3/20929 /08-09**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண்.26ல் மேலப்பொன்னகரம் இரண்டாவது தெருவில் அமைந்துள்ள கதவு எண்.26, புனித பிரிட்டோ ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக வரும் பொதுமக்கள் குடிநீருக்காக சிரமப்படுவதால், இலவசமாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .611**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**9) Jn.S1/ 39462 /07**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட எல்லை பகுதியில் 72 வார்டுகளுக்கும் சேர்த்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைப்பதற்கு சுமார் ரூ.256.81 கோடியும் திட்ட மதிப்பீடு மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் பெற்று 7 சிப்பங்களாக பிரித்து டெண்டர் வரவழைத்து, வேலை உத்தரவு வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது. சாலையோர வாய்க்கால்கள் மற்றும் பெரிய வாய்க்கால்கள் வேலை செய்யும்பொழுது வேலைகள் செய்வதற்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்பு பகுதிகள் மற்றும் நடைபாதைகளில் உள்ள மாநகராட்சி அனுமதி பெற்ற பெட்டிக் கடைகள் மற்றும் அனுமதி பெறாத பெட்டிக் கடைகளை அகற்ற வேண்டியது அவசியமாகிறது.(படிக்கட்டு, சாக்கடை ஆய்வுத் தொட்டி, சாய்தள மேடை மற்றும் ஆக்கிரமிப்பு வீட்டுச்சுவர்கள் போன்றவை) மேற்படி பணிகள் 18 மாதங்களில் முடிக்க வேண்டியுள்ளது. ஆகவே முறையாக மழைநீர் வடிகால் அமைக்க நடைபாதையில் உள்ள பெட்டிக் கடைகள் மற்றும் இதர ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்றக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .612**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**10) ம.வ.5 / 30829 /08**

தமிழ்நாட்டில் தொழில்வரி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது, மதுரை மாநகராட்சியில் இதர வருவாய் தரும் இனங்களில் வசூல் பணிகளோடு சேர்த்து தொழில்வரி வசூல் செய்யப்பட்டு வருவதால் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை முழுமையாக எய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் இதை மாநகராட்சிக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

இதனை களையும் பொருட்டு முத்திரை தாள் தீர்வை வரி (Stamp Duty) பதிவு துறை மூலமாகவும், கேளிக்கை வரி (Entertainment Tax) வணிக வரிதுறை மூலமாகவும் வசூலிக்கப்பட்டு வருவதுபோல், தொழில் வரியினையும், வணிகதுறை மூலம் வணிக நிறுவனங்களிடமிருந்து வரி வசூலித்து 95% உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 5% வணிக துறைக்கும் ஒதுக்கீடு செய்தும் மற்ற அரசுமற்றும் தனியார் துறையிலும் சிறிய கடைகளுக்கும் தொடர்ந்து உளளாட்சி நிறுவனம் மூலம் வசூலிக்குமாறு சட்டம் இயற்ற அரசினை கேட்க்கொள்ள ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .613**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**11) Jn.S.1/30829/08**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திடடத்தின்கீழ், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக சாலைகளில் மண் கூட்டும் இயந்திரம் நான்கு எண்ணம் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. நான்கு முறை டெண்டர் கோரியதில் ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்ட தொழில்நுட்ப குறிப்பின்படி டெண்டர் எதுவும் பெறப்படவில்லை. மேலும் சிறிய சாலைகளில் அமைந்துள்ள வீடுகளிலிருந்து பெறப்படும் குப்பைகளை சேகரித்து உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்ல ஏதுவாக நான்கு சக்கர சிறிய வாகனம் பத்து (10) எண்ணம் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.48.00 லட்சத்திற்கு மாநில கண்காணிப்பு அமைப்பு (SLNA) ஒப்புதல் பெற்று வாங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .614**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 31.10.2008